<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 116/2017 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கிருஷ்ணவேணி | நாள் | 04.07.2023 |
| கணவர் பெயர் | விஜயன் | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை:-</u>

1) இவ்வழக்கில் நான் யாருக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், என் தந்தைக்காக இந்த வழக்கை நானே எடுத்து நடத்துகிறேன். அதனால் அவரது சார்பாக சாட்சியம் அளிக்கிறேன்.

2) இவ்வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், எங்களுக்கு சொந்தமான நிலத்தை நெடுஞ்சாலை துறையினர் அவர்களுக்கு வேண்டுமென கூறி எடுத்துக்கொள்ள முயற்சி செய்தனர். அதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

3) இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது ஏதேனும் பத்திரமோ, பட்டாவோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், எதுவும் கொடுக்கவில்லை. 1995ம் வருடத்திற்கு முன்பு இருந்து என் தந்தை தாவா சொத்தில் கட்டிடம் கட்டி அனுபவித்து வருவதாகவும், அதை அரசு துறையினர் அங்கிகரித்து உள்ளதாகவும், கூறியுள்ள நிலையில் அவ்வாறு அங்கிகரித்தது தொடர்பாக ஆவணங்கள் எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

4) என் பிரமாண பத்திரிக்கையில் M/S.V.S.எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தை சேர்ந்தவர்கள் தாவா சொத்திற்கு கிழபுறம் ஒரு சொத்தை விலைக்கு வாங்கியதாகவும், மேற்படி நபர்கள் தாவா சொத்தை விலைக்கு கேட்டதாகவும், தாவா சொத்தை விற்க மறுக்கவே விரோதம் கொண்டு அவர்களது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளை தூண்டி தாவா சொத்தை அபகரிக்க முயற்சி செய்வதாக நான் கூறியுள்ள நிலையில், மேற்படி M/S.V.S.எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தை சேர்ந்த எவரையேனும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால், இல்லை.

5) தாவா சொத்தானது நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சொத்து என்றாலும், தாவா சொத்தின் அனுபவத்தில் நாங்கள் உள்ளதாக சொல்வதாலேயே

அதன் பேரில் எங்களுக்கு எவ்வித உரிமை மூலமும் ஏற்பட்டுவிடாது என்றாலும், சரியல்ல.

6) என் முதல் விசாரணை சாட்சியத்தில் 2ம் பிரதிவாதி தவறான ஒரு அறிவிப்பை பிரிவு 28ன் கீழ் என் தகப்பனாருக்கு அளித்து 15 நாட்களுக்குள் தாவா சொத்தில் இருந்து வெளியேற வேண்டுமென கூறியதாக நான் சொல்லியுள்ள நிலையில் எந்த சட்டத்தின் கீழ் மேற்படி அறிவிப்பு வழங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

7) என் பிரமாண பத்திரிக்கையில் சேலம்கேம்ப் மலைப்பாதையில் எந்த ஆக்கிரமிப்பும் நாங்கள் செய்யவில்லை என்றும், மேற்படி ரோட்டு பகுதியானது எல்லை சுற்று சுவருக்குள் அடங்கியே வருகிறது என்றும், நான் சொல்லியுள்ள நிலையில் மேற்படி சுற்று சுவரானது எல்லையை குறிக்கும் எல்லைக்கல் இல்லை என்றாலும், அது பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட சுற்றுச்சுவர் என்றாலும், சரியல்ல.

8) தாவா சொத்தை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என கூறும் நிலையிலும், நில அளவையரை வைத்து அளந்து பார்த்தால்தான் உண்மை நிலை தெரியவரும் என நான் சொல்லியுள்ள நிலையில், அவ்வாறு நில அளவையரை வைத்து அளக்க ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளோமா என்றால், இல்லை.

9) மேற்படி 2ம் பிரதிவாதியால் என் தந்தையின் பெயரில் அளிக்கப்பட்ட அறிவிப்புக்கு எதிராக ஆட்சேபனை மனு ஏதேனும் அளித்துள்ளோமா என்றால், எதுவும் அளிக்கவில்லை. 2ம் பிரதிவாதியை அவரது அலுவலகத்தில் சந்தித்து மாதிரி வரைபடத்தில் பிழை உள்ளது எனவும், அறிக்கையை திரும்ப பெறவேண்டும் என கேட்டதாக நான் சொல்லியுள்ள நிலையில், அது தொடர்பாக எழுத்து பூர்வமாக மனு ஏதேனும் அளித்துள்ளோமா என்றால், இல்லை.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.